**<u>சாட்சிகளின் வாக்குமூலம்.</u>**

<u>பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 ( I) உ.வி.மு.ச. பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.</u>

**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வந்தவாசி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.101/2018</u>**

| | | | | |
|---|---|---|---|---|
| வாக்குமூலம் | - **வா.சா.1** | தொடங்கும் நேரம் | : | 12.04 p.m. |
| | | முடிவுறும் நேரம் | : | 12.15 p.m. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **பானு** | மதம் | : | -- |
| க/பெ. | : | **செல்வராஜ்** | தொழில் | : | -- |
| கிராமம் | : | **கொட்டை** | வயது | : | **58** |
| தாலுக்கா | : | **வந்தவாசி** | நாள் | : | **24.02.2026** |

1987ஆம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு, 2026ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் **24**ஆம் நாள் சாட்சியம்.

**<u>முதல் விசாரணை</u>**

இந்த வழக்கில் வாதியாவேன். எனது முதல் விசாரணைக்காக சாட்சிய சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. படித்து பார்த்து கையெழுத்து செய்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது. கீழ்கண்ட ஆவணங்கள் என் தரப்பில் தாக்கல் செய்யப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| **01.** | **22.08.1946** | **தேதியிட்ட கெங்கம்மாள் பெயரில் உள்ள கிரய ஆவணம் - சான்றிட்ட நகல்.** | **வா.த.சா.ஆ.1.** |
| **02.** | **05.02.1976** | **தேதியிட்ட பாலகிருஷ்ணன் பெயரில் உள்ள கிரய ஆவணம் - சான்றிட்ட நகல்.** | **வா.த.சா.ஆ.2.** |
| **03.** | **04.01.2018** | **தேதியிட்ட ஜெகதீசன் (1ம் பிரதிவாதி) பெயரில் உள்ள கிரய ஆவணம் - சான்றிட்ட நகல்.** | **வா.த.சா.ஆ.3.** |
| **04.** | **18.03.2016** | **தேதியிட்ட பானு (வாதி) என்பவர் பெயரில் உள்ள கிரய ஆவணம் - சான்றிட்ட நகல்.** | **வா.த.சா.ஆ.4.** |
| **05.** | **01.09.2017** | **தேதியிட்ட கோவிந்த செட்டி மற்றும் 3 பேர் மற்றும் வாதி பெயரில் உள்ள சிட்டா. (பட்டா எண்.541) - கணினி வழி பதிவிறக்க நகல்.** | **வா.த.சா.ஆ.5.** |

| | | | |
|---|---|---|---|
| **06.** | **09.04.2018** | **தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு - அலுவலக நகல்.** | **வா.த.சா.ஆ.6** |
| **07.** | **--** | **கீழ்கொடுங்காலூர் சார் பதிவாளர் பெயரில் உள்ள அஞ்சல் ஒப்புகை அட்டை.** | **வா.த.சா.ஆ.7** |
| **08.** | **--** | **4ம் பிரதிவாதி பெயரில் உள்ள அஞ்சல் ஒப்புகை அட்டை.** | **வா.த.சா.ஆ.8** |
| **09.** | **24.04.2018** | **தேதியிட்ட மாவட்ட பதிவாளரின் கடிதம்** | **வா.த.சா.ஆ.9** |
| **10.** | **25.05.2018** | **தேதியிட்ட செய்யாறு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இருந்து அனுப்பப்பட்ட கடிதம்.** | **வா.த.சா.ஆ.10** |

மேற்படி **வா.த.சா.ஆ.1 முதல் வா.த.சா.ஆ.10** வரையிலான ஆவணங்கள் என் தரப்பில் குறியீடு செய்யப்படுகின்றன. தாவாப்படி தீர்ப்பாகும்படி வேண்டிக்கொள்கிறேன். **பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in Open court read over to the witness in the presence of the Plaintiff/Defendant and admitted by him/her to be correct.

Sd/-C. Mahalakshmi,
District Munsif,
Vandavasi.